UNIVERSITY OF ... RECEIVED 1979-9--2 PERIODICALS DIVISION LIBRARY

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

THE EELA NADU

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 புரட்டாசி 16 ஜுல்ஹஜ் 9 இதழ் 232

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2-10-79

அரசுக்கு எதிரான துண்டுப்பிரசுர வழக்கு

நவம்பர் 5-ல் கொழும்பில் நடைபெறும்

(கொழும்பு)

அரசுக்கு எதிராக துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாக திருவாளர்கள் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட எட்டு இளைஞர்களுக்கு எதிரான வழக்கு அடுத்த மாதம் ஐந்தாம் திகதி கொழும்பில் விசாரணைசெய்யப்படும்;

அரசுக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களை மட்டக்களப்பில் விநியோகித்ததாக இவர்கள் மீது குற்றம்சாட்டப்பட்டு தாக்கல்செய்யப்பட்ட வழக்கு, நேற்று கொழும்பு பிரதம நீதவான் திரு டி. பி. எல்லபொல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது; எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்; "மேற்படி வழக்கு மட்டக்களப்பில் விசாரணைசெய்யப்படவேண்டும் என்ற முன்னை வாதத்தை தாம் வாபஸ் பெற்றுக்கொள்வதாக" தெரி

[6-ம் பக்கம் பார்க்க]

80 ஜூன் முதல் கொழும்பு-யாழ் நேரடித் தொலைபேசி தொடர்பு!

தபால் அமைச்சு செயலாளர் தகவல்

"தபால் சேவையும் பன்முகப்படுத்தப்படும்"

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அடுத்த ஆண்டு ஜூன் மாதமளவில் நுண் அலைத்தொடர்பு மூலம் நேரடித் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படும்.

இவ்வாறு தபால் அமைச்சின் செயலாளர் திரு. கே. ஜே. சேரசிங்க தெரிவித்தார்.

தபால் திணைக்களத்தில் நேற்று அவர் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது!

நாடு முழுவதும் 2764 உப தபால் கந்தோர்களும் உள்ளன. இவற்றில் சனத் தொகையையும் தூரத்தையும் கருத்தில் கொண்டு 100 உபதபால் கந்தோர்கள் தபால் கந்தோர்களாக தரம் உயர்த்தப்பட உள்ளன.

தபால் சேவை விரைவில் பன்முகப்படுத்தப்பட உள்ளன. குறிப்பிட சில இடங்களிலிருந்து இன்னுமொரு இடத்திற்கு தபால்கள் செல்வதானால் கொழும்புக்கு வந்தே செல்லவேண்டி உள்ளது. இந்நிலையைத் தவிர்த்து எந்த இடத்திலிருந்தும் கடிதங்களில் குறிப்பிடப்படும் இடங்களுக்கு நேரடியாக தபால்களை விநியோகம் செய்யும் பொருட்டே தபால் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது. (ம)

யாழ். ஆஸ்பத்திரியில்

தாதிகள் பற்றுக்குறையை நீக்கக் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் 4 பேர் கட்டிலாலும், மலசலகூடத்திலும் விழுந்து இறந்திருப்பதால், தாதிகள் பற்றுக்குறையை உடனடியாக நிவர்த்திசெய்ய வேண்டும் என்று யாழ் மாநகரசபை தீர்மானித்துள்ளது.

மாநகரமுதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. ம. ஆரோக்கியம் மேற்கண்ட பிரேரணையை கொண்டு வந்தார்.

அப் பிரேரணையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

"பெரியாஸ்பத்திரியில் 4 தாதிபரிபாலகிகளும் 25 3ம் தர பிரதம தாதிகளும் 150 1ம் தர சாதாரண தாதிகளும் பற்றுக்குறையாக இருக்

[6-ம் பக்கம் பார்க்க]

கிரிக்கெட் டெஸ்ட்

[கான்பூர்]

ஆஸ்திரேலிய-இந்திய மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று கான்பூரில் ஆரம்பமாகிறது.

சென்னையில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்டும், பங்களூரில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டும் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது தெரிந்ததே.

ரூ. 1,75,000 கொள்ளை

அறுவர் கைது; ரூ. 30,000 மீட்பு

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டையிலுள்ள பிரபல வர்த்தக நிலையமொன்றில் நடந்த ஒரு லட்சத்து 75 ஆயிரம் கொள்ளை தொடர்பாக பொலிஸார் ஆறு சந்தேக நபர்களை கைது செய்ததுடன், 30,000 ரூபாவை மீட்டுள்ளனர்!

இக்கொள்ளை தொடர்பாக சந்தேக நபர் ஒருவரைதேடிவந்தசுக பொலிஸ் அதிகாரிகள் கோஷ்டியினர் யாழ்ப்பாணம் சென்றுள்ளனர்.

இக்கொள்ளை 8 பேர்களைக் கொண்ட ஆயுதக் கோஷ்டியினரால் கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தப்பட்டது.

சந்தேக நபர்களில் மூவர் நேற்று முன்தினம் பெலியாகொடையில், புறக்கோட்டை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு திமால் குணதிலகாவினால் கைது செய்யப்பட்டனர்.

மிகுதிப் பணத்தையும் பொலிஸார் விரைவில் மீட்பார்கள் என பொலிஸார் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட பணம், கொள்ளை நடத்தியவர்கள் மத்தியில் பிரிக்கப்பட்டிருக்கலாமென்றும், இவர்களில் ஒருவர், அப்பணத்துடன் யாழ்ப்பாணம் சென்றிருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. (ஐ)

காசி, வண்ணை வழக்குகள்

பெப். 12-க்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

திருவாளர்கள் காசி ஆனந்தன், வண்ணை ஆனந்தன், முத்துக்குமாரு, சபாலிங்கம், நடேசானந்தன் ஆகியோர் அரசுக்கு எதிராக நஷ்டஈடு கோரித் தனித்தனியாகத் தாக்கல்செய்திருக்கும் வழக்குகள் சம்பந்தமான விசாரணை, அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 12ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபரையும், பொலிஸ்மா அதிபரையும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு "தேடப்படுகிறார்கள்" என்ற சுவரொட்டி மூலம் தமக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியதாக அரசுக்கு எதிராக நஷ்டஈடு கோரி மேற்படி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது:

முதல் மூன்று மனுதாரும் தலா ஒரு லட்சம் ரூபாவும், மற்றைய இருவரும் ஐம்பதினாயிரம் ரூபாவும் நஷ்டஈடாகக் கோரியுள்ளனர்.

மனுதாரர்களுக்கு எதிராகச் சட்டத்தரணி கே. சிவானந்தன் அனுசரணையுடன் சட்டத்தரணி எஸ். நடேசன் கியூ. ஸி. ஆஜராகிறார்.

[6-ம் பக்கம் பார்க்க]

பண்டிதரின் கோரிக்கை மீது கல்விஅதிபதி நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

தமது தொகுதியிலுள்ள சில வித்தியாலயங்களைத் தரமுயர்த்தக் கோரிப் பண்டிதர் கா.பொ. இரத்தினம் விடுத்த வேண்டுகோளுக்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக வடமாநிலக் கல்வியதிபதி தெரிவித்துள்ளார்.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தை மத்தியமகாவித்தியாலயமாக்கவும், புங்குடுதீவு சுப்பிரமணிய வித்தியாசாலையை கனிஷ்ட வித்தியாசாலையாக்குவதற்கும், சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையை மகாவித்தியாலயமாக்குவதற்கும் தமது சிபார்சுகளைக் கல்வியமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளதாக வடமாநிலக் கல்வி அதிபதி, ஊர்காவற்றுறை எம். பி.க்கு அறிவித்துள்ளார்.

மேலும் புங்குடுதீவு சித்திவிநாயகர் வித்தியாசாலை பற்றியும், புங்குடுதீவு ஸ்ரீகணேச வித்தியாசாலை பற்றியும் முழு விபரங்களையும் திரட்டித் தருமாறு வட்டாரக் கல்வியதிகாரியிடம் தாம் கேட்டுள்ளதாக அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கா)

ராஜமன்னார் காலமானார்

[சென்னை]

சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் டாக்டர் பி. வி. ராஜமன்னார் (79வயது) நேற்றுக் காலமானார்.

புதிய சட்டமூலம் மீது இன்று விவாதம்

(கொழும்பு)

அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டமூலம் இன்று பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இன்றே நிறைவேற்றப்படும்,

இன்று மாலை 3 மணிக்கு பாராளுமன்றம் கூடும்போது இத்துடன் மற்றும் இரு சட்டமூலங்களும் விவாதிக்கப்படும்.

அத்தியாவசிய பொதுச் சேவை சட்டமூலத்தை இன்றே நிறைவேற்றி முடிப்பதற்காக பாராளுமன்றத்தின் வழமையான ஒழுங்குவிதிகள் சில இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

இச் சட்டமூலத்தை எதிர்த்து அரசியல் அமைப்பு நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பும் இன்றே வெளியிடப்படும். (இ)

கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படவிருக்கும் அக்டோபர் மாதச் சம்பளத்தை இம்மாதம் 20ந் தேதிக்கு முன்பு வழங்குமாறு யாழ்ப்பாண அரசாங்க பொதுச்சேவைத் தொழிலாளர் சங்கம், யாழ் அரசாங்க அதிபர் திரு.யோகேந்திரதுரைசுவாமியை கோரியுள்ளனர்.

வரி விளம்பரம்

கல்வி

9 ஆம் வகுப்பு 1979-ம் ஆண்டு புதிய பாடத்திட்டத் திற்கானபயிற்சிகள் புதியபணி தப் பயிற்சி 7-00, புதிய விஞ்ஞானவினாவிடை 5ரூ 50 சதம்; தமிழ்மொழி 4 ரூ. 50 சதம்; Five Model Test Papers in English 5 ரூ. 50சதம் சசந்தனகம், 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 3717

விற்பனைக்கு

சுன்னாகம் புகையிரத வீதியில் 15 பரப்பைக்கொண்ட தோட்டக்காணி உடனடி விற்பனைக்குண்டு கைத்தொழில் பேட்டைகள் நிறுவ மிகவும் உகந்த காணி. மெயின் வீதியோடு இணைந்துள்ளது தொடர்புகொள்ளும்விலாசம்: 256 Tyrecraft Flats, Vauxhall Street, Colombo-2 3730

சோதிடம்

குறிப்பு பார்த்து பலன் சொல்வதின் மூலம் உங்கள் பிரச்சனைகள் தீர்த்துவைக்கப்படும் (கல்வி, விவாகம், தொழில், வெளியூர் செல்லுதல், முதலியன) குறிப்புடன் ரூபா 10/- அனுப்புக KL M Krishnapillaiy ஸ்ரீ ஆதிபராசக்தி சோதிட நிலையம், மாவிட்டபுரம். 3731

ஏல விற்பனை

4000 வெற்றுச் சாக்குகள் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க வளவில் 6-10-79 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு ஏலத்தில் விற்பனையாகவுள்ளன.

தலைவர்,
புலோலி ப. நோ. கூ. சங்கம்
புலோலி கிழக்கு.
பருத்தித்துறை

1979-09-28 3728

நா. ஏகாம்பரம்
சட்டத்தரணி
வட்டுக்கோட்டை.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அம்பாள் வீதியைச் சேர்ந்த வெற்றிவேலு சிவசம்புவின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணச்சொத்து
நியர்யாதிக்கம் இல: 3471

யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு 25 அம்பாள் வீதியைச் சேர்ந்த வெற்றிவேலு சிவசம்பு மனைவி பெண் தங்கரத்தினம்

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதென்றும் 1979ம் ஆண்டு ஆடி மாதம் 4ந் திகதி அதற்கிணங்க முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1979ம் ஆண்டு புரட்டாதி 17ம் திகதி. 3727

பொ. காங்கேயன்
சட்டத்தரணி
சொக்குவில்.

முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற அளவெட்டி வடக்கைச் சேர்ந்த கந்தையா செட்டியார் விநாயகமூர்த்தி செட்டியார் என்பவரின் மரணசாதன விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன
நியாயாதிக்கம் இல: 42.

கந்தையா செட்டியார் விநாயகமூர்த்தி செட்டியார் மைம்பெண் சிவயோகம், அளவெட்டி வடக்கு.

மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979 ஆவணி மாதம் 22ஆந் நாளன்று அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்.

1979 ஆவணி 22இல்: 3732

மின் தொழிலாளர் பதவி

அச்சுவேலி இராமச் சபை நிர்வாக உத்தியோகஸ்தரால் 10-10-79ம் திகதிவரை மின் தொழிலாளர் பதவிக்கு பின்வரும் தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

1 வயது: 10-10-79ம் திகதியன்று 22வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

2. கல்வித்தராதரம்: குறைந்தது தமிழ் 8ம் வகுப்பு சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. மின்இணைப்பு வேலைகளில் 5 வருட அனுபவமும் தொழில்நுட்ப பயிற்சியும் பெற்றிருத்தல்வேண்டும்.

குறிப்பு: மின்இணைப்பு வேலைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் நாளாந்த சம்பளம் பெறும் அமையத் தொழிலாளர்களாக நியமிக்கப்படுவர்.

ஒப்பம்
நீ. ப. ஜெகநாதன்
நிர்வாக உத்தியோகத்தர்
இராமச் சபை அச்சுவேலி

திகதி 28-9-79 3729

தடுப்புக்காவல் நிலையங்கள்

(கொழும்பு)

கைது செய்யப்படுபவர்களை தடுப்புக்காவலில் வைக்கும் நான்கு நிலையங்கள் புதிதாக அமைக்கப்படவுள்ளன.

வெளி மாவட்டத்திலிருந்து கைதிகளை கொழும்புக்கே கொண்டுவருவதால் நெருக்கடி தோன்றியுள்ளதாகவும் புதிய நிலையங்கள் அமைக்கப்பட்டதும் நெருக்கடி குறையும் என்றும் சிறைச்சாலை ஆணையாளர் திரு. தெல்கொட தெரிவித்தார்.

தற்போது கொழும்பில் 2500 பேர் தடுப்புக்காவலில் இருந்துவருகின்றனர்

(கு)



துருவநட்சத்திரம் ஒன்று உதிர்ந்தது

வானத்திலே கோடி நட்சத்திரங்கள் தெரிவதுண்டு. ஆயினும் துருவநட்சத்திரம் ஒன்றே தான் தனித்துவமான பெருமையைப் பெறுகிறது. அதேபோல நம்மக்கள் மத்தியில் கோடிக்கணக்கானவர்கள்பிறந்தாலும் ஒருசிலரே தனித்துவமான பெருமையைத் தேடிக்கொள்கின்றனர். திரு. சின்னத்தம்பி பரமலிங்கமும் அந்தச் சிலரில் ஒருவராவர். அவ்னூர் கடந்த 2-9-79 தினம் பாயிற் படுக்காது பரமனடிஎய்தினார்.

தொல்புரம் சின்னத்தம்பி—நாயகம் தம்பதிகளின் புத்திரராக, 5-11-1904ம் ஆண்டு பிறந்த திரு. பரமலிங்கம், தமது கல்வியை தொல்புரம் கிருஷ்ணன் வித்தியாசாலையிலும், விக்ரோறியாக்கல்லூரி, யாழ்ப்பாணக்கல்லூரி, பரமேஸ்வரா கல்லூரி மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார்.

இளமையிலேயே கல்வி ஆற்றலும், கருணை உள்ளமும் கொண்டவராகத் திகழ்ந்த திரு. பரமலிங்கம் 1925-ம் ஆண்டு வள்ளியம்மை என்பவரைக் கைப்பிடித்து, வரதராசா, இரத்தினராசா, சரசானந்தராசா சண்முகராசா என்னும் நான்குபுத்திரர்களைப் பெற்றார்.

புகையிரதநிலைய அதிபராக இருந்த காலத்திலும், ஓய்வு பெற்ற பின்னரும் அவர் தமிழுக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியன. தொல்புரம் மடத்தடிப்பிள்ளையார் ஆலயத்திருப்பணிச் சபை செயலாளர், வட்டுக்கம்பரை அம்மன்கோவில் திருப்பணிச் சபை செயலாளர், தொல்புரம் மூளாய் பரஸ்பர சகாயநிதிச் சங்க உபதலைவர், மூளாய்கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகக்குழு அங்கத்தவர், தொல்புரம் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உபதலைவர். மானமுதலியார் பரிபாலன சபை உபதலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்க நிர்வாகக்குழு அங்கத்தவர், தொல்புரம் கிராமமுன்னேற்றச்சங்கத்தலைவர், சித்தன்கேணி சிவன் கோவில்சபைஉபதலைவர், யாழ் ஐக்கியசாபநிதி வரையறுக்கப்பட்ட பேர் சங்கப் பொருளாளர் முதலான பதவிகளிலிருந்து அவர் ஆற்றிய தொண்டுகள் அளப்பில.

அன்னாரது சேவைமனப்பான்மையையும் செயற்திறனையும், உணர்ந்த அரசு 1972ம் ஆண்டு 'சமாதான நீதவான்' பட்டம் அளித்து அவரைக் கௌரவித்தது.

"தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வாக்கிற்கொப்ப புகழோடு தோன்றி 1975-ம் ஆண்டு திருமணப் பொன்விழாக் கொண்டாடிய திரு. பரமலிங்கம் இத்தனை கடிதில் இவ்வுலகவாழ்வை நீத்தார் என்ற செய்திகேட்டுக் கலங்காதவர்கள் இல்லை எனலாம். அவர் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

க. தி. ரவீந்திரன்

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

"கல்லூரியின் வளர்ச்சியால் தேவைகளும் வளர்கின்றன"

(யாழ்ப்பாணம்)

"வளர்ந்துவருகின்ற எமது கல்லூரியின் தேவைகளும் வளர்ந்துகொண்டே வருகின்றன. மாணவர் தொகை அதிகரிப்பினுல் இத்தேவைகளை நிறைவேற்றவேண்டிய நெருக்கடி எழுந்துள்ளது."

இவ்வாறு வசாவிளான் மத்திய மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் மேற்படி வித்தியாலய அதிபரும் விழாத் தலைவருமான திரு. ஏ இராமசாமி பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"எமக்கு மிகவும் அவசியமாக வேண்டப்படுவது ஒரு பொதுக்கட்ட மண்டபமாகும். இங்குள்ள விடுதிகள் போதாத நிலையில் இருக்கிறது. ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக விடுதிகள் நடாத்தப்படுகின்ற போதும், ஆண்களின் விடுதி பல காலமாகப் பழுதடைந்த நிலையில் இருப்பதால் வகுப்பறைக் கட்டிடத்திலேயே ஆண்கள் தங்கியிருக்கிறார்கள். சகல வசதிகளும்கொண்ட கட்டிடம் அமைக்கப்பட்ட பின்தான் புதிய மாணவர்களை விடுதியில் சேர்க்க முடியும்.

எமது கல்லூரிக்கு தொலைபேசி இல்லாதது பெரும் குறையாகவே இருக்கிறது. அதைப் போக்குவதற்காக பழைய மாணவர் சங்கம் அஞ்சல் தொலைபேசி அமைச்சருடன் தொடர்பு கொண்டுள்ளது. அத்தோடு கல்லூரியில் பெருவிழாக்கள் நடாத்துவதற்கு எழுபதையாயிரம் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்ட திறந்தவெளியரங்கு ஒன்றை அமைப்பதற்கு முயற்சி எடுத்துவருகின்றது

"எமது கல்லூரியில் பயிலும் சைவச்சிறுவர்களுக்கு சைவ ஒழுக்கம், சைவ அறிவு, சைவாசாரங்கள் என்பவற்றை வளர்க்கவும், நாளாந்த வாழ்க்கையில் அவற்றைக் கடைப்பிடித்து வாழப் பயிற்றவும் நோக்கமாகக்கொண்டு எமது கல்லூரியில் சைவ வளர்ச்சிக் கழகம் இயங்கிவருகிறது. அதேவேளை இங்கு கத்தோலிக்க மன்றம் அமைக்கப்பட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையிலும் நற்சிந்தனை அளிக்கப்பட்டுவருகிறது.

(கோ-கு)

"வாய்ப் பேச்சில்தான் இங்கு சமயம் உள்ளது"

(யாழ்ப்பாணம்)

"சமயம் வாய்ப்பேச்சில்தான் இங்கு உள்ளது. சமயம் அநுபூதியாக திகழாமல் விட்டால் என்ன பிரயோசனம்? வாய் வேதாந்தம் பேசி வீண் காலம் போக்காமல் நாதாத மோன நிலை நண்ணுவது எக்காலம் என்கிறார் தவத்திரு யோக சுவாமிகள் 67 ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்தவர் அன்னை சாரதா தேவி. உங்களைப்போன்று கல்விகற்றவரில்லை. ஆனால் ஆன்மீக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்து பலருக்கு வாழ்க்கையில் வழிகாட்டியுள்ளார்."

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி மாணவிகளின் இந்து சங்கத்தால் கொண்டாடப்பட்ட நவராத்திரிவிழாவில் உரையாற்றுகையில், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம செயலாளர் பிர. இரத்தினசபாபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

செல்வி வாசுகி கோபாலரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிர. இரத்தினசபாபதி மேலும் பேசுகையில்:

"கடவுள் வழிபாட்டில் பக்தி கலக்க வேண்டும். வெறும் சடங்காக இருந்தால் கடவுள் வழிபாட்டால் ஆவது ஒன்றும் இல்லை. கடவுளின் நாமத்தை உச்சரித்து தங்களுக்கு சாதகமான நிலையைப் பயன்படுத்தி வாழும் சிலரைப் பற்றி நகைச்சுவையாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் குறிப்பிடுவார்:

நகைக் கடையில் அங்கு எப்பொழுதும் கேசவா, கேசவா, கோபாலா, கோபாலா, ஹரி ஹரி ஹரா, ஹரா என்று நாம சங்கீர்த்தனம் நடக்கும் இதைப் பார்த்து கேட்ட வாடிக்கையாளர்கள் இந்த நகைக் கடைக்காரன் ரொம்ப கண்ணியமானவன் என்று கருதி அங்கு போவது வழக்கம் ஆனால் இக்கடைக்காரன் ரொம்பக்கடாத பேர்வழி. ஒவ்வொரு நாமத்துக்கும் ஒரு அர்த்தம் வைத்திருந்தான் ஒரு வாடிக்கையாளர் அக்கடைக்கு வந்ததும் கேசவா என்பான ஒருவன் கேசவா என்றால் வந்தவர் யாராக இருக்கலாம்? இவன் கோபாலனு? கோபால என்றால் ஒரு முட்டாள் உடனே உள்ளேயிருந்து ஒரு குரல் இவன் கோபாலனுக இருப்பதால் ஹரி ஹரி என்பான் ஹரி ஹரி என்றால் இவன் கொடுத்த நகையில் ஒரு துண்டை வெட்டலாமா என்பது பொருள். வெளி மேசையில் இருப்பவன் ஹரா ஹரா என்பான் அதன் அர்த்தம் என்ன வென்றால் தாராளமாக பவுனை களவாடலாம் என்பது.

ஸ்ரீராமகிருஷ்ணர் இப்படி நாமசங்கீர்த்தனத்தால் ஒன்றும் ஆகாத போலி வாழ்க்கையால் இறைவனை அடைய முடியாது மதம் அனுஷ்டானத்துக்குரியது. இக்கதையைச் சொன்னதும் ஸ்ரீராமகிருஷ்ணர் மந்திரிலிருந்த அடியார்கள் அனைவரும் நகைத்தனர்" என்ளுர்.

(புலோலி-நி-ச)

நாகர் கோவில் உற்சவம்

(புலோலி)

சரித்திரப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் பூர்வீகநாகதம்பிரான் ஆலய கப்பல்திருவிழா இம்மாதம் 6ம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த எட்டுவருட காலமாக ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்று வந்ததைத் தொடர்ந்து இவ்வாலய உற்சவம் நடைபெறாதிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

நாவலப்பிட்டியில் நவராத்திரிப் பாமாலை வெளியீடு

(நாவலப்பிட்டி)

நாவலப்பிட்டியில் நடைபெற்ற நவராத்திரிப் பாமாலை

(6ம் பக்கம் பார்க்க)

விஞ்ஞான ஆசிரியர் தேவை

"அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகாவித்தியாலயத்தில் க. பொ. த. ப. (உயர்) வகுப்பில் பௌதிகம், விலங்கியல் போதிக்க ஆசிரியர்கள் உடனடியாகத் தேவை. வித்தியாலய அதிபருடன் தொடர்பு கொள்ளவும்." 3726

இந்திய அரசியல் அமைப்பில் சில முக்கிய அம்சங்கள்

இலங்கை மக்களை இன்று மிகவும் கவர்ந்துள்ள இந்திய இடைத்தேர்தலில் இந்திய அரசியலமைப்பின் சில முக்கிய அம்சங்களை இக்கட்டுரையில் ஆராய்வது வாசகர்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

இலங்கையில் ஒற்றை ஆட்சி இன்று இருக்கிறது. ஒரே பிரதமர், ஒரே ஜனாதிபதி. இந்தியாவிலும் ஒரே பிரதமர் ஒரே ஜனாதிபதி ஆனால் மாநிலங்களில் சட்டசபைகளும் அம் மாநிலங்களில் முதலமைச்சர்களும் ஆட்சி செய்கிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஜனாதிபதியின் பிரதிநிதியாக கவர்னர்களும் நியமனம் பெறுகிறார்கள். இவற்றை பற்றி இந்திய அரசியல் அமைப்புக் கூறுவதென்ன?

1949 நவம்பர் இருபத்தாறாம் திகதி இந்திய அரசியல் திட்டம் அரசியல் நிர்ணய சபையில் அங்கீகாரம் பெற்றது. 1950 ஜனவரி 26-ந் திகதி அது அமுலுக்கு வந்தது. அதன்பின்னர் அரசியல் திட்டம் 19 தடவைகள் திருத்தப்பட்டுள்ளது. உலகிலேயே மிக நீண்ட அரசியல் சட்டம் இந்தியாவினுடையதுதான் என்று கூறலாம்.

இந்திய அரசியல்சட்டம் அரசாங்கத்தின் அடிப்படைக்கோட்பாடுகளை மாத்திரம் நிர்ணயிக்கவில்லை. சமஷ்டி அரசியல் அமைப்பை விருப்பத்துடன் அது பிரஜாவுரிமை, ஜீவாதார உரிமைகள், அரசாங்கக்கொள்கைத் தத்துவங்கள் அரசாங்க அமைப்பு, பார்லிமெண்டும் ராஜ்ய சட்டசபைகளும், யூனியன் நீதிமன்றமும் ஹைகோர்ட்டுகளும், யூனியன், ராஜ்யங்களிடையே உள்ள உறவு முறைகள், அரசாங்க சேவைகள், ஆட்சி மொழி, வேறுபல ஆதார விஷயங்கள் என்பவற்றை உள்ளடக்கியுள்ளன.

ஜனநாயகமும், குடியாட்சி முறையும் அரசியல் சட்டத்தின் அடிப்படைகள். இங்கு எத்தனையோ மதப்பிரிவினர் உள்ளனர். ஆனால் வகுப்புவாதச் சித்தாந்தத்துக்கு அரசியல் சட்டம் இடங்கொடுக்கவில்லை.

இந்திய அரசியல் அமைப்பு ஒரு சமஷ்டி அமைப்பு ஆகும். அதே சமயம் ஐக்கிய அரசாங்க (யுனிட்டரி) முறைக்கும் அதில் அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. சமஷ்டி அமைப்பு சம்பந்தமான பல்வேறு சித்தாந்தங்களை ஆராய்ந்து ஒரு மையமான முறையை அரசியல் சட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள்.

மத்திய ஆட்சி, மாநில ஆட்சிகள் என்ற இருவகை அமைப்புகளை அது ஏற்படுத்தி அவற்றின் அதிகாரங்களைத் தெளிவாக வரையறுக்கிறது. நெருக்கடி காலத்தில் மாநில சட்டசபைகளின் அதிகாரத்தை மத்திய அரசே செலுத்துவதற்கும் அரசியல் சட்டம் இடம் அளிக்கிறது. இது இந்திய சமஷ்டி முறையின் மிக முக்கியமான தனிச்சிறப்பு. மாநிலங்களின் அதிகாரங்கள் தொடர்பாக உள்ள எந்த ஒரு விஷயம் சம்பந்தமாகவும், நாடு முழுவதன் நலனுக்கருதி, மத்திய பார்லிமென்ட் சட்டம் இயற்ற முடியும்.

காந்தி வகுத்த சமூகப் புரட்சி

மகாத்மாகாந்தி தோற்றுவித்த மாபெரும்சமூகப்புரட்சிக்கு அரசியல் சட்டம் அங்கீகாரமுத்திரை குத்தியுள்ளது. மக்களிடையே சம அந்தஸ்து சம்பந்தமாக அரசியல் சட்டம் வழங்கியுள்ள எல்லா உரிமைகளையும்விட அதிக மதிப்பு வாய்ந்தது தீண்டாமை ஒழிப்புப் பற்றியதாகும். கிணறுகள், தெருக்கள், பள்ளிகள், வழிபாட்டு ஸ்தலங்கள் முதலியவற்றை உபயோகிப்பது சம்பந்தமாக 'தீண்டத்தகாதவரை' ஒதுக்கிவைப்பது சட்ட விரோதமாகும்.

இந்தியாவை 'ராஜ்யங்களின் யூனியன்' என்று அரசியல் சட்டம் குறிப்பிடுகிறது. அழிக்கமுடியாத ஐக்கிய அமைப்பு இது. இந்திய யூனியனில் 16 மாநிலங்களும், 9 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

இந்தியாவின் மத்திய சட்டமன்றத்துக்குப் பார்லிமெண்ட் என்று பெயர். ஜனாதிபதியும், லோகசபை, ராஜ்யசபையென்ற இரு சபைகளும் சேர்ந்தது அது.

ராஜ்யசபை

ராஜ்யசபையில் ராஜ்யங்களின் அதாவது யூனியன் உறுப்புகளின் பிரதிநிதிகள் உள்ளனர். அது நிரந்தரமாக இருந்து வரும்சபை. அதன் உறுப்பினர்களில் மூன்றிலொரு பகுதியினர் பதவிக்காலம் இரு வருஷங்களுக்கு ஒருமுறை முடிவடையும். ராஜ்யசபையில் அதிகபட்சம் 250 உறுப்பினர்கள் இருக்கலாம். லோகசபை உறுப்பினர் தொகையில் சுமார் அரைப்பங்கு இருப்பர். ராஜ்யசபை உறுப்பினர்களில் 12 பேரை ஜனாதிபதி நியமனம் செய்வார். ஏனையோரை மாநிலங்களும், யூனியன்பிரதேசங்களும் தேர்ந்தெடுக்கின்றன. 16 மாநிலங்களுக்கு 218 ஸ்தானங்களும், யூனியன் பிரதேசங்களுக்கு 8 ஸ்தானங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ராஜ்யசபை உறுப்பினர்களை மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுப்பதில்லை. அவர்களை ராஜ்ய அசெம்பிளியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

புத்தொளி

லோகசபை

இந்தியாவின் இடைத்தேர்தல் தற்போது நடக்கவிருக்கின்றது. மாநிலங்களிலுள்ள பிரதேசவாரித் தொகுதிகளிலிருந்து நேரடித்தேர்தல் மூலம் லோகசபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இச்சபையில், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் தொகை 544 ஆக இருக்கும். யூனியன் பிரதேசங்களிலிருந்து அதிகபட்சம் 25 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஷெடியூல் சாதியாருக்கும், ஆதிவாசிகளுக்கும் லோகசபையில் ஸ்தானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. லோகசபையின் காலம் ஐந்தாண்டுகளாகும். இடையில் கலைக்கப்படுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு. ஸ்திரமான ஆட்சி மத்தியில் இல்லாமலிருப்பின் ஜனாதிபதி இடைத்தேர்தலுக்காக லோகசபையைக் கலைக்கமுடியும். அந்த அதிகாரத்தைப் பாவித்தே ஜனாதிபதி தற்போது லோகசபையைக் கலைத்துள்ளார்.

மாநிலங்களிலும் இரு சபைகள்

மாநிலங்களின் அரசமைப்பு யூனியன் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கிறது. மாநில அரசின் நிர்வாகியாகக் கவர்னர் இருக்கிறார். மாநிலங்களின் முதன் மந்திரிகளைக் கவர்னர் நியமிக்கிறார். மத்திய சர்க்காரைப் போலவே மாநிலங்களிலும் மந்திரிசபை மூலம் ஆட்சி நடக்கிறது.

மத்தியில் லோகசபையும் ராஜ்ய சபையும் இருப்பது போலவே மாநிலங்களிலும் இரு சபைகள் இருக்கின்றன. ஒன்றைக் கீழ் சபையென்றும் மற்றதை மேற்சபையென்றும் அழைப்பர்.

இப்போது தமிழக மாநில சட்டசபையில் கீழ் சபை எம். ஜி. ஆரை முதலமைச்சராகக் கொண்டுள்ளது. மேல் சபை என்பது இலங்கைச் செல்வர் ம. பொ. சிவஞானகிராமணியாரைத் தலைவராகக் கொண்டுள்ளது. பீகார், பம்பாய், மத்திய பிரதேசம், தமிழ்நாடு, கர்நாடகம், பஞ்சாப், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்காளம் ஆகிய மாநில சட்டசபைகளில் இரு சபைகள் இருக்கின்றன.

மத்திய ஆட்சியில் லோகசபையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று இருப்பதுபோல ராஜ்ய சபையிலும் இருக்கின்றன. ராஜ்யங்களின் சபையான மாநில சட்டசபைகளிலும் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என இருக்கின்றன.

இந்தியாவில் மாநில சட்ட சட்டசபைத் தேர்தல்களும் லோகசபைத் தேர்தல்களும் வெவ்வேறு காலங்களில் நடக்கின்றன.

இரண்டுபட்டுள்ள இரண்டு கட்சிகள்

இன்று இந்தியாவில் இரண்டு ஜனதா — இரண்டு காங்கிரஸ் — இரண்டு தி மு க என ஒரே கொள்கையுள்ள கட்சிகள் இரண்டுபட்டுள்ளன. இத்தேர்தலில் போட்டியிட இருக்கும் கட்சிகளாவன. ஜனதா—உத்தியோக பூர்வக் காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ், ஜனதா மதச் சார்பற்றது (தற்போது லோக்கட்சியாகப் பெயரை மாற்றியுள்ளது), மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், அ தி மு க, தி மு க, அகாலி தளம், பாரத கம்யூனிஸ்ட், விவசாய தொழிலாளர்கட்சி, ஐக்கிய நாடாளுமன்ற முன்னணி, புரட்சி சோஷலிஸ்ட், முஸ்லீம் லீக், மாநாட்டுக்கட்சி, குடியரசு என்பனவையாகும்.

கலைக்கப்பட்ட லோகசபையில் ஜெகஜீவன் தலைமையிலான ஜனதாவுக்கு 205 உறுப்பினர்களும், ஜனதா மதச் சார்பற்றதிற்கு 77 உறுப்பினர்களும், உத்தியோகபூர்வக் காங்கிரஸுக்கு 75 உறுப்பினர்களும், இந்திரா காங்கிரஸுக்கு 74 உறுப்பினர்களும், மார்க்ஸிஸக் கம்யூனிஸ்ட்கட்சிக்கு 22 உறுப்பினர்களும், அ இ அ தி மு கவுக்கு 18 உறுப்பினர்களும் இருந்தார்கள், ஏனைய கட்சிகளில் இரண்டு. மூன்று அங்கத்தவர்களே அங்கம் வகித்தார்கள்.

எவர் எக்கட்சியுடன் இணைந்தாலும் இன்று இந்தியாவில் மும்முனைப் போட்டியே ஏற்பட்டுள்ளது. ஜெகஜீவன்ராம் ஜனதா வாஜபாய் ஜனசங் அ இ அ தி மு க கூட்டு ஒன்று இந்திரா காங்கிரஸ் தி மு க கூட்டு ஒன்று. சரண்சிங் ஜனதா உத்தியோகபூர்வ காங்கிரஸ் ஒன்று. இவை மூன்று கட்சிகளில் ஒன்றே இந்திய இடைத் தேர்தலில் ஆளும் கட்சியாக வரும் வாய்ப்பைப் பெறவுள்ளது.

தமிழ்நாட்டில் இன்று தி மு கவும், அ இ அ தி மு கவும் மிகப் பலம் வாய்ந்த மாநில கட்சிகளாக இருக்கின்றன. இந்தியாவின் அரசியல் சரித்திரத்தில் மாநிலக்கட்சி ஒன்று ஆளும் கட்சியாகவும், எதிர்க் கட்சியாகவும் விளங்குவது தமிழ்நாட்டு மாநிலத்திலேயாகும்.

மத்தியிலுள்ள கட்சிகளும் நான் முந்தி நீ முந்தி என்று தமிழ்நாடு சட்டசபைக் கட்சிகளுடன் தேர்தல் ஒப்பந்தம் செய்ய முனைந்திருக்கின்றன. ஆட்சி அமைக்கத் தனிப்பலம் கிடைக்காதபோதும் தமிழ்நாட்டு மாநிலக்கட்சியின் ஆதரவுடன் அரசை அமைக்கும் வாய்ப்பும் இலகுவில் ஏற்படலாம். இங்கு 39 லோகசபைத் தொகுதிகள் இருக்கின்றன.

இதனால்தான் இந்திரா காங்கிரஸ் தி மு கவுடனும், ஜனதா கட்சி அ இ அ தி மு கவுடனும் கூட்டுச் சேர்ந்துள்ளன. தேர்தலுக்கு இன்னமும் 3 மாதங்கள் இருக்கின்றன. நியமனப் பத்திரம் கொடுக்கும்வரை தமிழ்நாட்டில் தேர்தல் ஒப்பந்தங்கள், திடீர் திருப்பங்கள் இன்னும் நிகழலாம். அ இ அ தி மு க அடிக்கொருதரம் தன்னை மாற்றிக்கொண்டுவருவது இதற்கு ஆதாரமாக அமைகின்றது.

இந்திய அரசியல் திட்டத்தை ஆக்கிய சிற்பி டாக்டர் அம்பேத்கார் சொன்னதை இந்த இடத்தில் குறிப்பிடுவது அவசியம் "நாட்டைவிடத் தங்கள் கொள்கையே முக்கியமானதென்று கட்சிகள் கருதினால் நமது சுதந்திரத்திற்கு இரண்டாவது முறையாக ஆபத்தேற்படும். சுதந்திரத்தை நாம் நிரந்தரமாக இழக்கவும் நேரலாம். இத்தகைய நிலைமை வராமல் நாம் உறுதியுடன் தடுக்கவேண்டும். நம் உடலில் கடைசித்துளி இரத்தம் இருக்கும்வரை நம் சுதந்திரத்தைக் காத்துநிற்கக் கங்கணம் கட்டவேண்டும்."

மக்கள் கருத்து

அமைச்சருக்கு நன்றி

7-6-79 'ஈழநாடு' இதழில் நான் விடுத்த வேண்டுகோளுக்கமைய அமைச்சர் இராசதுரை அவர்கள் சுவாமி விபுலானந்த அடிகளுக்கு முத்திரை வெளிவரும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சியைத்தருகின்றது!

அதேபோல ஆறுமுகநாவலர் மறைந்த நூற்றாண்டுவிழா வரும் டிசம்பர் மாதம் கொண்டாடப்பெறும்போது அழகிய முறையில் ஆறுமுகநாவலர் முத்திரையும் வெளியிட முயற்சி எடுக்கவேண்டும்.

ஏற்கனவே அரசாங்கம் நாவலருக்கு முத்திரையிட்டது நாவலரை அவமதிப்பதுபோல அமைந்துவிட்டது. நாவலருக்கு மீசை வைத்து வெளியிட்டதுபோல அமைந்துவிட்டது. அக்காலத்தில் முத்திரை வெளியிட்டோர் அக்கறையற்ற முறையில் வெளியிட்டது நாவலர் படங்களையும் சிலையையும் நேரில் கண்டவர்களுக்குத் தெரியும். ஆகவே தற்போதிருக்கும் நாவலர் சிலையின் படம் பொறித்த முத்திரை வெளியிடச் செய்தல் முன்னர் விட்ட பிழையைத் திருத்திக்கொள்ள இடமுண்டாகும். இந்த நாட்டிலே ஒருவருக்கு இரண்டு முறை முத்திரை வெளியிட்டதும் உண்டு. ஆகவே இந்தக் கோரிக்கைக்கும் அமைச்சர் "இராசு" ஆவன செய்வாரென நம்புகிறோம்.

வெ. சு. நடராசா
நல்லூர்

⁂ ⁂ ⁂

நெல்லியடி பஸ் நிலையம்

நெல்லியடிப் பஸ் நிலையத்தில் போதிய இடவசதி இன்மையால் பிரயாணிகள் அவதியுற்றுவரும்வேளையில் தனியார் வாகனங்களும் பஸ் நிலையத்தை ஆக்கிரமிப்புச் செய்யத் தொடங்கியுள்ளதால் புதிய பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் வாகனங்கள் பஸ் நிலையத்திலேயே திருப்பப்படுகின்றன. மிக வேகமாகவரும் வாகனங்கள் கூட நெல்லியடிச் சந்தியிலிருந்து பஸ் நிலையத்தில் அபாயகரமான முறையில் திருப்பப்பட்டு மீண்டும் வீதிக்குவரும் போது பஸ் நிலையத்தில் நிற்கும் பிரயாணிகள் தமது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கவேண்டியுள்ளது.

இது வாகனச் சாரதிகள் தம்மைச் சர்க்கஸ்காரர்கள் போல் சாகஸங்களைப் புரியத்தக்க நெல்லியடிப் பஸ் நிலையம் பயன்படுத்தப்பட்டுவருவதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

அதுமட்டுமன்று, பஸ் நிலையத்தைச் சுற்றியுள்ள போசன சாலைகளில் போட்டிபோட்டுக்கொண்டு ஒலிபெருக்கிகள் அலறுவது காதைப் பிய்ப்பதுடன் பிரயாணிகளை அவஸ்தைக்கும் ஆளாக்கிவருகின்றன. உரிய அதிகாரிகள் இவற்றைக் கவனித்து ஆவன செய்வார்களா?

மன்னன்
நெல்லியடி

"தையல்கலையைப் பயின்றால் செலாவணியைப் பெறலாம்"

— யாழ். எம். பி.

[யாழ்ப்பாணம்]

"பெண்கள் தையற்கலையைச் சிறப்புறக் கற்பதன் மூலம் தங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதுடன் பெருந்தொகையான அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்க முடியும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி திரு. வெ. யோகேஸ்வரன் யாழ் விக்னேஸ்வரா தையல் நிலையத்தின் இரண்டாவது ஆண்டு பூர்த்தி விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு. கணேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"காலத்திற்குக் காலம் உலகிலுள்ள சகல துறைகளிலும் பழமைகள் மறைந்து புதுமைகள் தோன்றுகின்றன. அதே போலவே தையல்த் துறையிலும் மக்கள் பழைய முறைகளையே தொடர்ந்தும் கடைப்பிடித்துவராது காலத்திற்கேற்ப நவீன முறையில் தையல் வேலைகளைப் பழகிக்கொள்ள வேண்டும்.

"காலத்திற்கேற்ற முறைகளில் உடைகளைத் தைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் வேலை இல்லாப் பிரச்னையைத் தீர்க்க முடிவதோடு பெரும் தொகையான அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க முடியும்.

[செ]

சட்டத்தைக் கண்டித்து இன்று பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிரதேசத் தொழிற்சங்கங்களின் கூட்டுச்சபை, அத்தியவசிய சேவைச் சட்டத்தைக் கண்டித்து நடாத்தும் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை நிம்மர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு கு பரராசசிங்கம் தலைமையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்தில் திருவாளர்கள் எம் நடராசா, க கணேசன், வி எஸ் கனகரத்தினம், எம் குமாரசாமி, எஸ் கே சுந்தரலிங்கம், க நவரத்தினம், ஆர் பானுதேவன், ஜனாப் எம் ஏ எவி இக்பால் உட்படப் பலர் உரையாற்றுவர். (செ)

மாதகலில் வெளிச்சவீடு

[பண்டத்தரிப்பு]

மாதகல் சுழிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மீனவர்களின் நலன்கருதி மாதகல் கடற்கரையில் வெளிச்சவீடு ஒன்றை அமைப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி எம் பி யுமான திரு அ அமிர்தலிங்கம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

கருணாநிதிக்கு எதிராக

சர்க்காரியா கமிஷனை நியமிக்குமாறு அ.தி.மு.க.வும் இ.கம்யூனிஸ்டுமேவற்புறுத்தின

சென்னையில் நிருபர்கள் மத்தியில்இந்திரா

சென்னை, அக்.1

தி.மு.க. தலைவர் திரு மு. கருணாநிதிக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்க சர்க்காரியா கமிஷனை நியமிக்குமாறு தமிழக முதல்வர் திரு எம்.ஜி இராமச்சந்திரனின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும் தம்மை வற்புறுத்தியதாக முன்னாள் இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னையில் நிருபர்களிடம் கூறினார்.

பத்திரிகை நிருபர்களின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது!

இந்திரா காங்கிரஸ்-தி.மு.க தேர்தல் உடன்பாடு இறுதியானது! மாற்றமுடியாதது

இதே உடன்பாடு தமிழ் நாடு, புதுச்சேரி சட்டசபைத் தேர்தல்களுக்கும் பொருந்தும் என்றே நான் கருதுகிறேன்.

அண்மையில் திரு. கருணாநிதியுடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் நட்பு முறையில் அமைந்திருந்தன.

அ.தி.மு.கவுடன் உடன்பாடு

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடன் இதுவரை நேரடியில் இந்திரா காங்கிரஸ் ஏதேனும் உடன்பாடு ஏற்படுமா என்ற பேச்சுக்கே இடமில்லை.

இந்திரா காங்கிரஸுக்கும் தி.மு.க வுக்கும் இடையில் என்றுமே கசப்பு உணர்வு இருந்ததில்லை. இரு கட்சிகளினதும் நிலை அனைவருக்கும் தெரிந்ததுதான். இரு கட்சிகளும் ஒத்துழைத்த போதிலும் வேறுபட்ட கருத்துக் கொண்டிருந்தபோதிலும் அது தெளிவாக இருந்தது.

இந்திராகாந்தி ஒருவராலேயே நிலையான ஆட்சி அமைக்க முடியும்

சென்னை, அக். 1

இந்தியாவில் நிலையான உறுதியான அரசு ஒன்று அமைய வேண்டும் என்பதே திராவிட முன்னேற்றக் கழகத்தின் விருப்பம். இந்நிலையில் மத்தியில் திருமதி இந்திராகாந்தி ஒருவராலேயே நிலையான உறுதியான அரசை அமைக்க முடியும் எனவே தி. மு. க. இந்திரா காங்கிரஸுடன் தேர்தல் உடன்பாடுசெய்து அதற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

இவ்வாறு திரு. மு. கருணாநிதி நேற்று சென்னையில் நடைபெற்ற அண்ணா பிறந்ததின விழா-பெரியார் நூற்றாண்டு விழாவில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது! தி மு க-இந்திரா காங்கிரஸ் உடன்பாடு நிலையானது! அது தொடர்ந்தும் நீடிக்கும்.

இந்த உறவு ஒன்றும் புதிதானதல்ல பழைய உறவே இப்போது புதுப்பிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத்தேர்தல் ஒத்திவைக்கப்படுமானால் நாடுமுழுவதும் கிளர்ச்சிகள் ஏற்படுவதைத்தடுக்க முடியாமல் இருக்கும் என்றும் திரு. கருணாநிதி கூறினார். (இ)

"இந்திரா காங்கிரஸில் சேரமாட்டேன்; வதந்திகளை நம்பவேண்டாம்" என்கிறார் ஜெகஜீவன்

புதுடில்லி, அக். 1

இந்திராகாங்கிரஸ் கட்சியில் தாம் சேரப்போவதாக வெளிவந்துள்ள செய்திகள் விஷமத்தனமானது! வேண்டுமென்றே சோடிக்கப்பட்டது; வெறும் வதந்தியே எவரும் நம்பவேண்டாம் என்று ஜனதா கட்சித் தலைவர் திரு ஜெகஜீவன்ராம் கூறியுள்ளார்.

ஜனதா கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வீண் வதந்திகளை பரப்பிவிட்டு பொய்ப்பிரசாரங்களைச் செய்வதன்மூலம் வெற்றிகாண முடியாது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

திரு. சரண்சிங்கின் மக்கள் கட்சி காங்கிரஸ் கூட்டணிக்கு லோகசபை கலைக்கப்பட்ட போது இருந்த செல்வாக்கு இப்போது படிப்படியாக குறைந்துகொண்டு போகிறது. ஜனதாக்கட்சி இப்போது பலமடைந்துவருகிறது. (இ)

ஜனதா ஆட்சிகால

வகுப்புக் கலவரங்களுக்கு இந்திராவே காரணம்

தேசாய், திருமதி காந்தியை சாடுகிறார்

புதுடில்லி,

கடந்த ஜனதா ஆட்சிக் காலத்தில் இடம்பெற்ற வகுப்புக்கலவரங்களுக்கு திருமதி இந்திராகாந்தியும் அவரது காங்கிரஸ் கட்சியும் அதன் ஆதரவாளர்களுமே காரணம்

இவ்வாறு முன்னாள் இந்திய பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் சூரத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஜனதா ஆட்சிக்காலம் ஒரு "பொற்காலம்" அக்காலத்தில் அவசியப் பண்டங்களின் நியாயமான விலைகளில் விற்கப்பட்டன. சட்டமும் ஒழுங்கும் கட்டுப்பாட்டுக்குள் இருந்துவந்தன

எமது ஆட்சிக்காலத்திலேயே அண்டைநாடுகளுடன் சுமுக உறவு கொள்ள முடிந்தது. (இ)

பாப்பரசர் இன்று உரை

(நியுயோர்க்)

புனித பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர் செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உரைநிகழ்த்துவார். (இ)

ஹிந்தி பேசாத மக்கள்மீது அதுதிணிக்கப்படமாட்டாது

தி. மு. க. கூட்டத்தில் இந்திரா உறுதி

சென்னை, அக் 2

இந்திரா காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் ஹிந்தி பேசாத மக்கள்மீது ஹிந்தி மொழி திணிக்கப்படமாட்டாது, இவ்விடயம் குறித்து எனது தந்தையார் நேருவின் உறுதிமொழி காப்பாற்றப்படும்;

இவ்வாறு திருமதி இந்திரா காந்தி சென்னை கடற்கரை சீரணிமைதானத்தில் நடைபெற்ற அண்ணா 'பிறந்ததின விழா, பெரியார் நூற்றாண்டு நினைவிழாவில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்,

தி மு க - இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு கொள்கை அடிப்படையிலும் காரணத்தோடுமே செய்யப்பட்டது

தேசியப் பிரச்னைகளின் அடிப்படையிலும் மக்களை எதிர்நோக்கியுள்ள சவால்களை சமாளிப்பதிலும் இரு கட்சிகளும் ஒன்றுபட்டுசெயல்படும் என்றும் திருமதி காந்தி கூறினார்.

தி மு க ஏற்பாடுசெய்திருந்த இக்கூட்டத்தில் திரு. மு. கருணாநிதி, பொதுச்செயலாளர் திரு அன்பழகன் பொருளாளர் ஜனாப் சாதிக்பாட்ஷா, இந்திரா காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் திரு கருப்பையா மூப்பனார், ஆர். வி. சுவாமிநாதன் இன்றைய தலைவர் திரு இளையபெருமாள் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஆகியோரும் கலந்துகொண்டனர்

திருமதி காந்தி மேலும் கூறியதாவது!

தி மு க வும் இந்திரா காங்கிரஸும் சமூக, பொருளாதார கொள்கைகளில் ஒன்றுபட்டு நிற்கின்றன. எனது ஆட்சிக் காலத்தில் 20 அம்சத் திட்டத்தை தி மு க அரசு திறம்பட நடத்தியது பாராட்டுக்குரியது

லட்சக்கணக்கில் கைது

ஜனநாயகத்தின் பெயரில் ஜனதா ஆட்சியில் லட்சக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டனர்.

இந்திரா கவலை

நெருக்கடி காலநிலை அமுலிலிருந்தபோது இடம்பெற்ற சில வேண்டத்தகாத நிகழ்ச்சிகள் வருந்தத்திற்குரியதே இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது என்றும் உறுதி கூறிய திருமதி காந்தி 30 ஆண்டுகாலத்தில் இன்று இந்தியா உலக அரங்கில் தமக்குரிய இடத்தை இழந்துள்ளது என்றும் கூறினார். (இ)

"என்னைச் சந்திக்க நேரம்குறித்த எம்.ஜி. ஆர்.."

சென்னை, அக் 1

என்னைச் சந்திப்பதற்கு நேரம் குறித்த தமிழக முதல்வர் திரு எம். ஜி இராமச்சந்திரன், பின்னர் என்னைச் சந்திக்காமலேயே விட்டுவிட்டார். இப்படியானதொரு நம்பமுடியாத நிலையே தஞ்சாவூர் இடைத் தேர்தலுக்குப் பின்னர் அ தி மு க - இந்திரா காங்கிரஸ் உறவு, முறிவதற்குக் காரணமாக அமைந்தது என்று திருமதி இந்திராகாந்தி சென்னையில் கூறினார்.

தேர்தல் ஒத்திவைப்பு

இடைக்காலத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசியல் சாஸனத்தில் எதுவித சாத்தியக்கூறுகளும் இடையாது என்றே எண்ணுகிறேன். எனினும் தேர்தலை ஒத்திவைக்கப்படுமிடத்தில் நாடு பல நெருக்கடிகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் கூறினார். (இ)

தி.மு.க. வில் சேர்ந்தார்

சென்னை, அக்: 1

திரு. எம். ஜி. ஆரின் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர் திரு. எம். கே. இராமசாமி நேற்று சென்னையில் திருமதி இந்திரா காந்தியின் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துகொண்டார்.

அயத்தொல்லா கொமேனி

மோதத்தில் ஆட்சியிலிருந்து அகற்றப்படுவார்!

முன்னாள் ஈரான் பிரதமர் பக்தியார் நம்பிக்கை

பாரிஸ், அக் 1

ஈரானின் உத்தியோகபூர்வமற்ற ராஜ்ஜத் தலைவர் அயத்தொல்லா கொமேனி இன்னும் ஆறுமாத காலத்திற்குள் ஆட்சியிலிருந்து அகற்றப்படுவார் எனத்தாம் நம்புவதாக முன்னாள் ஈரான் பிரதமர் டாக்டர் பக்தியார் பாரிஸில் தெரிவித்துள்ளார்

முன்னாள் ஈரான் மன்னர் ஷாவின் ஆட்சியில் கடைசிப் பிரதமராக இருந்த டாக்டர் பக்தியார் சஞ்சிகை ஒன்றுக்கு அளித்தபேட்டியில் மேலும் கூறியதாவது!

அயத்தொல்லா கொமேனியின் அரசு பொருளாதார ரீதியில் தோல்விகண்டுள்ளது.

மன்னர் ஷா நாட்டைவிட்டு வெளியேறும்வரை அயத்தொல்லா கொமேனி காத்திருந்ததுபோல் நான் காத்திருக்கமாட்டேன்!!

அயத்தொல்லா கொமேனி அதிகாரத்திலிருக்கும்போதே நான் தாயகம் திரும்பி ஆட்சியைக் கைப்பற்றுவேன். (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
ஸ்ரீகாந்த் - பிரமிளா
கோமாதாஎன் குலமாதா
ஈஸ்ட்மன்கலர்-புதியபிரதி

நாகம்மாள் [சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி ஆர்-சாவித்திரி
வேட்டைக்காரன்

வெலிங்டன் [illegible]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வாணிஸ்ரீ
குலமா குணமா

லிடோ (யாழ் நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-தேவிகா
நடித்த
நீலவானம் (புதிய பிரதி)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்-பானுமதி-எம்! ஆர்- ஆர். வாசு
நடித்த
எடுப்பார் கைப்பிள்ளை
[புதிய பிரதி]

மனோகரா (யாழ் நகர்) தினசரி10-30, 2-30, 6-30, 9-45
ஆனந்தன்—சச்சு நடித்த
வீரத்திருமகன்
[புதிய பிரதி]
6-10-79 முதல் அந்தமான் காதலி

3RD CROWDED WEEK
REGAL (Jaffna)
Daily at 2-00, 4-30, 7-00 & 9-30p. m. only
Security expert Joe Collins is about to break his own fool-proof system in a Hamburg bank...
The Big bank-heist Is on!
WARREN BEATTY, GOLDIE HAWN
in
"THE HEIST"
(color — adults)

3rd and FINAL WEEK!
SHANTHI JAFFNA PHONE 7642
Daily 0-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p.m
"The Golden Voyage of Sinbad"
Magic — Thrill — Color
Extended till 7 10.79 due to Popular Demand from Schools & The Public
- Schools - Contact Management -

ஸ்ரீதர் போன் 7345 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-30,2-30,6-15,9-45
எம். ஜி. ஆர் - ஜெயலலிதா
ஒரு தாய் மக்கள்
(புதிய பிரதி)
6-10-79 முதல்
சிவாஜி - சுஜாதா ஜோடி
முதல்முதலாக ஒன்று சேர்ந்து நடித்த வர்ணச் சித்திரம்
தீபம்

கடைசி சில தினங்கள் மட்டும்
ராணி தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ் நகர்) ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா
நாகேஷ் - மனோகர் நடித்த
பட்டணத்தில் பூதம்
[புதிய பிரதி] [ஈஸ்ட்மன் கலர்]

ராஜா இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
யாழ். நகர் முத்துராமன் - கே. ஆர். விஜயா
நடித்த
இதோ எந்தன் தெய்வம்
நாளை முதல் சிவாஜி கணேசன் நடித்த
சபாஷ் மீனா
(புதிய பிரதி)

இன்றைய பலன்

புரட்டாசி மாதம் 16-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
[2-10-1979]

மேடம்: வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும் செல்வாக்குப்பெருகும். செல்வாக்குப்படைத்தவர்களின் ஆதரவுகிடைக்கும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்குச் சாதகமான முடிவைத்தரும்.

இடபம்: அறிவுத்தாகம் மேலோங்கிநிற்கும் ஆராய்ச்சிகளில் ஈடுபடவிரும்புவீர்கள் விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும் எதிர்பாராத பணம் கைக்கு கிடைக்கலாம்.

மிதுனம்: உறவாடிக் கெடுப்பதற்குப் பகைவர்கள் வருவர் உற்சாகம் குன்றும் பிரயாணத்தின்போது பொருள் தவறக்கூடும் சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

கடகம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும் [illegible] பொருள்வரவுக்கு இடமுண்டு. கண்ணியமான நடவடிக்கைகளில் ஈடுபடுவீர்கள் புதிய நண்பர்கள் சேர்வார்கள்.

சிங்கம்: தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம் வேண்டாத விவாதங்களில் வீண்பெயர் கேட்கநேரிடும் கவலைச்செய்திக்கு இடமுண்டு. நிதியில் நெருக்கடியும் தோன்றும்.

கன்னி: அறவழியை மனம் நாடும் வேதனை கொடுத்த சம்பவமொன்று இன்று சமரசமாகத் தீர்க்கப்படலாம் சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும் பயன்தரும் பிரயாணமொன்று ஏற்படலாம்.

துலாம்: கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும் எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள் ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும் சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம் கலைஞர்களுக்கு நல்லதினம்

விருட்சிகம்: பொதுப்பணிகளில் ஈடுபடவிரும்புவீர்கள். குறிப்பாக அரசியல் வாதிகளுக்குப் புதிய ஆர்வம் பிறக்கலாம் சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரையை மேற்கொள்வதற்கும் இடமுண்டு.

தனு: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும் சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும். அதிவேலை வாய்க்கு இடமுண்டு கலைஞர்களுக்கு பொன்னான தினம்.

மகரம்: இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும் பிறந்தகத்தின் நினைவு திடீரெனத் தலைதூக்கும் கடமையில் சோர்வு தென்படும் மனத்திடம் வேண்டும்.

கும்பம்: கட்டிவெல்லம் போல இனிக்கும் வாழ்க்கை காதலர்கள் எண்ணங்கள் கைகூடும் இனபந்துக்களின் ஆதரவும் கிடைக்கும் எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும்.

மீனம்: பொறுமையின் நிழல் உங்களைத் தொடரும் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தைத் தேடிக்கொள்ளுவீர்கள் அரசபயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

RIO Jaffna
Phone: 7607
Daily 10-30 a.m. 4-45, 7-00 & 9-30 p.m.
Beltstone Fox
From: 3rd
Demolition Squad

மரங்களை அழித்தமையே
பருவகால மாற்றத்திற்கு காரணம்
நல்லூர் எம். பி. கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

"நாம் காடுகளையும் மரங்களையும் கண்மூடித்தனமாக அழித்தமையே பருவகால மாற்றங்களுக்கு காரணமாக அமைகிறது இதனாலேயே நாம் எதிர்பாராத நேரங்களில் மழையும் இயற்கை மாற்றங்களும் ஏற்படுகின்றன."

இவ்வாறு நல்லூர் எம். பி திரு. மு சிவசிதம்பரம் நல்லூர் கமநலசேவை நிலையத்தில் நடைபெற்ற மரநாட்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ்நாட்டின் முன்மாதிரி

தமிழ்நாட்டில் கர்மவீரர் காமராஜர் காலத்தில் திட்டமிட்டு வீதியின் மருங்குகளில் எல்லாம் புளிய மரங்களை நாட்டியமையால் இன்று தமிழ்நாட்டில் பெருஞ்சாலைகளின் இருமருங்குகளிலும் புளியந்தோப்புகளை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. அதன் பலனை தமிழ் மக்கள் இன்று நன்கு அனுபவிக்கின்றனர்.

நாம் அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்த்திராமல் நமது பொருளாதார வளத்தை நாமே பேணக்கூடிய முறையில் விவசாயத்தில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். இதற்கு இங்குள்ள விவசாய உத்தியோகத்தர்கள் இதற்காக அயராது உழைக்கவேண்டும்.

யாழ் எம்.பி. கலந்துகொண்டார்

இவ்வைபவத்தில் நல்லூர் எம் பி யுடன் யாழ் எம். பி. திரு வெ யோகேஸ்வரனும் கலந்து கொண்டார். எம். பிக்களுடன் கமநலசேவை பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி அஞ்சலா ராஜதுரை விவசாய போதனாசிரியர் திரு. மு ஆனந்தகுமாரன் மற்றும் விவசாயிகளும் இணைந்து செவ்விளநீர் கன்றுகளையும், இப்பில் இப்பில், கொய்யாக் கன்றுகளையும் நாட்டினர்.

[இ- இ]

சீனஇளைஞரிடம் கம்யூனிஸ்ட் செல்வாக்கு குறைகிறதாம்

பீக்கிங், அக் 1

சீனாவில் இளைஞர்கள் மத்தியில் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்குக் குறைந்து வருகிறது என அங்குள்ள பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

"எக்ஸ்பிரறேஷன்" என்ற உத்தியோகப்பற்றற்ற பத்திரிகையே இச்செய்தியை வெளியிட்டுள்ளது

இதேவேளையில் இன்றைய சீன இளைஞர்கள் மத்தியில் கம்யூனிஸ்ட்கட்சிசெல்வாக்கை இழந்துவருவது குறித்த சுவரொட்டிகள் சீன. சுவர்களில் ஒட்டப்பட்டுவருகிறதாம்.

(இ)

வெற்றி

[அரியாலை]

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும், யாழ் பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற 2ம், 3ம் பிரிவுகளுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் புனித அந்தோனியார்கல்லூரி 2ம் பிரிவுக் கோஷ்டி 5-0 கோல்களாலும், 3ம் பிரிவுக் கோஷ்டி 1-0 கோல்களாலும் வெற்றியீட்டியது.

போட்டிகள் புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. [கு

"ஈழநாடு"
இந்தியத் தேர்தல் (1979) போட்டி

இவ்வருடம் டிசம்பர் மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்ற (லோகசபை) இடைத்தேர்தலையொட்டி ""ஈழநாடு'' பத்திரிகை தனது வாசகர்களுக்கு இத்தேர்தல் போட்டியை நடாத்துகிறது இப்போட்டியில் கலந்துகொள்ள நீங்கள் செய்ய வேண்டியது என்ன? இங்கு வெளியாகியுள்ள கூப்பனில் கேட்கப்பட்டுள்ள நான்கு கேள்விகளையும் கவனமாகப் படித்து, உங்களின் ஊகத்தைக்கொண்டு விடைகளைக் கண்டுபிடித்து, "போல்பொயின்ற்" பேனாவால் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள். ஒருவர் எத்தனை விடைகளையும் (கூப்பன்களையும்) அனுப்பலாம். கட்டுப்பாடு கிடையாது.

'ஈழநாடு தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டர சாங்கம்? :......................................
(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ....
(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?.......................
(4) புதிய பிரதமர் யார்?.........................

பெயர்:.......................................
விலாசம்:.......................................
....
....

.... கையொப்பம்
.... திகதி:

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49,
யாழ்ப்பாணம்.

யாழ். நகரில் இன்று

காந்திஜயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

மகாத்மா காந்தியின் 110வது ஜயந்திதினவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சமூக பொருளாதார, கல்வி கலை கலாச்சார அபிவிருத்தி பேரவையினரால் கொண்டாடப்படுகிறது.

பேரவைத்தலைவரும், பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருமான திரு சி. கந்தசாமி தலைமையில் விழா நடைபெறும்.

இன்று காலை 8 மணிக்கு கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தில் விசேஷ பூசை நடைபெறும். நண்பகல் 12 மணிக்கு பண்ணை அநாதை மாணவர் இல்லத்தில் அன்னதானம் நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலை மாணவ மாணவிகள் வெள்ளை உடையணிந்து ஊர்வலமாக யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மகாத்மாகாந்தி சிலைக்குவருவார்கள். வடமாநில கல்வி அதிபதி திரு ரி மாணிக்கவாசகர் சிலைக்கு அருகில்நின்று மாணவ மாணவிகளை வரவேற்று சத்தியப்பிரமாணத்தைஆரம்பித்துவைப்பதோடு மகாத்மா காந்திசிலைக்கு மாலை சூட்டுவார்.

"நான் மகாத்மா காந்தி அடிகளின் கொள்கைகளைக்கடைப்பிடிக்க என்னாலானவரை முயற்சிகளை மேற்கொள்வேன் என யாழ் மாநகர முதல்வா திரு இரா விசுவநாதன் மகாத்மா காந்தியின் சிலைக்குக்கீழ்நின்று சத்தியப் பிரமாணம் செய்வார்"

5 மணிக்கு ஆஸ்பத்திரி வீதியிலிருந்து மகாத்மாவின் பிரதிமை ஊர்வலம் பஜனையுடனும் மங்கள இசையுடனும் யாழ் வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடையும். அங்கு திரு. சோ அப்புலிங்கம் தலைமையில் மங்கள வாத்திய இசையும் திரு கே. ஆர். நடராஜனின் துதிப்பாடலும் அதனைத்தொடர்ந்து இராமநாதன் சங்கீத அக்கடமி மாணவிகளினதும் ரசிகரஞ்சன சபா மாணவிகளினதும் பஜனையும் நடைபெறும்.

மாலை 6 மணிக்கு யாழ் அரசாங்க அதிபரும் யாழ். மாவட்டச் செயலாளருமான திரு யோ கேந்திரா துரைசுவாமி விழாவை ஆரம்பித்து வைத்து உரையாற்றுவார்.

அதனைத்தொடர்ந்துநல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம், மேலதிக அரசாங்க அதிபர் திரு என். ஜெகநாதன் வடமாநிலக்கல்வி அதிபதி திரு ரி மாணிக்கவாசகர், கலாநிதி அ சண்முகதாஸ் பேராசிரியர் பி சந்திரசேகரம் திருவாளர்கள், எஸ் நவரத்தினம் சோ க தம்பிப்பிள்ளை, திருமலைத்தியாகி இரசகோபால் ஆகியோர் உரையாற்றுவர்.

"காந்தீய நெறியும் வழியும் இக்காலத்துக்கு ஒத்தது" என்னும் பொருள்பற்றி காந்திய சேவாசங்கத் தலைவர் திரு இ கந்தையா தலைமையில் பட்டிமன்றமும் வித்துவான் இ ஆறுமுகம் தலைமையில் கவியரங்கும் நடைபெறும்.

இரவு 9-45 மணிக்கு முன்னாள் நிரந்தரச் செயலாளர் திரு ம ஸ்ரீகாந்தா மகாத்மா காந்தி புலமைப்பரிசில் நிதியை ஆரம்பித்துவைப்பார். திரு த சோமசுந்தரம் மலர்ச்சி, சன்மான, உதவிக்கை நிதியை ஆரம்பித்து வைப்பார். 10 மணிக்கு அண்ணாமலை இசைக்கலை மன்ற மாணவிகளின் பஜனையும் 10-15க்கு நாதஸ்வரமேதை திரு. அப்புலிங்கத்திற்கு யாழ் எம் பி திரு வெ யோகேஸ்வரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பார் யாழ் மாநகர சபை உறுப்பினர் திரு எம் தியாகராசா திரு. அப்புலிங்கத்திற்குப் பொற்கிழி வழங்குவார்.

அகில இலங்கைப்போட்டியில் முதற்பரிசுபெற்ற கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை மாணவர்களின் அரிச்சந்திர மயான காண்டமும் பொன் சுந்தரலிங்கத்தின் துதிப்பாடலும் மறுமலர்ச்சி மன்றத்தினரின் பஜனையும் நடைபெறும். [கோ-அ]

ரயில் விபத்தில் வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தனிமையில் வாழ்ந்துவந்த வயோதிப சுருட்டுத்தொழிலாளி ஒருவர் ரயிலுக்குப் பலியானார்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த முத்து சின்னையா (68 வயது) என்பவரின் மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு எஸ் எஸ் பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

காங்கேசன்துறையிலிருந்து ரயில் புறப்பட்டு வந்தபோது, இறந்தவர் தள்ளாடியபடிவந்து என்ஜினுக்குள் ஏறமுற்பட்ட சமயம், தூக்கிவீசப்பட்டாரென்றும், ரத்த வெள்ளத்தில் கிடந்த அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகவும் விசாரணையில் கூறப்பட்டது.

விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கோ)

நாவலப்பிட்டியில்..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியீட்டின் முதல் பிரதியை சிங்களப் பெண்ணான திருமதி ஹேமவதி யோகானந்தன் வாங்கி தமிழ் சிங்கள சமய கலாச்சார உறவினைப் பாராட்டினார்.

இந்தவைபவம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தில் கஜலெட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

நாவலப்பிட்டி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு எஸ் புவிராஜசிங்கம் ஆத்மஜோதி நிலையத்தினரால் தொகுத்து வெளியிடப்பெற்ற இந்த நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றினார். ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா முத்தையாவும் பேசினார். இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சீனிமூட்டையால் மறைத்து மரங்கள் கடத்தப்பட்டன!

லொறி பிடிபட்டது; இருவர் கைது

(மாவிட்டபுரம்)

புளியங்குளத்திலிருந்து சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரம் எதுவுமின்றிச் சீனி மூடைகளால் மறைக்கப்பட்டுக் கடத்திவரப்பட்ட சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்களை, வசாவிளானில் வைத்து லொறியுடன் காங்கேசன்துறைப் பொலிஸார் கைப்பற்றியதுடன் இரு நபர்களையும் இது தொடர்பாகக் கைதுசெய்துள்ளனர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு எச் ஜி ஆரியசேன, குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு இராஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியே இந்த மரக் கடத்தலை முறியடித்துள்ளது.

யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொழும்பு மனிங் மார்க்கட்டிலிருந்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான 90 மூடை சீனியை ஏற்றிவந்த லொறியொன்று இந்த மரக் கடத்தலில் ஈடுபட்டதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொழும்பிலிருந்து சீனியை ஏற்றிக்கொண்டு வசாவிளானுக்கு வந்த இந்த லொறியிலிருந்து ஒருபகுதி சீனி மூடைகள் இறக்கப்பட்ட பின்னர், லொறி ஒருபகுதிச் சீனி மூடைகளுடன் புளியங்குளத்திற்குச் சென்று, அங்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான பாலை, முதிரை, தேக்கு போன்ற மரங்களை லொறியில் ஏற்றிய பின், சீனி மூடைகளால் மறைத்து, திரும்பவும் வசாவிளானுக்கு வந்துசேர்ந்தபோதே பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டதாகத் தெரிகிறது.

லொறிச் சாரதியான கொழும்பைச் சேர்ந்த சின்னையா இலட்சுமணன், வசாவிளானைச் சேர்ந்த நாகேந்திரம் மகாலிங்கம் ஆகியோர் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

லொறியும், மரங்களும், சீனி மூடைகளும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

யாழ்ப்பாணத்தில் பொலிஸ்தின விழா

(யாழ்ப்பாணம்)

பொலிஸ்தின விழா நேற்றுக் காலை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் வடபகுதிப் பொலிஸாரால் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவில் வடபிராந்தியப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு பி மகேந்திரன், யாழ் பொலிஸ் அதிபர் திரு. வெல்லி விக்கிரமசூரியா, வவுனியாப் பொலிஸ் அதிபர் திரு விஜயசூரியா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர்களான திரு ஹெரத், ஜனூப் பக்கீர், திரு ஹென்றி பெரேரா, காங்கேசன்துறை பொலிஸ் அதிபர் திரு இசுருபாலா, யாழ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு சந்திர பெரேரா, போக்குவரத்துப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு சேனாதிராசா உட்படச் சுமார் 200 பொலிசார் அணிவகுப்பில் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டக் கொடி, யாழ் மாவட்டக் கொடி மற்றும் பொலிஸ் கொடியும் பறக்கவிடப்பட்டன.

இன்று கொழும்பில் நடைபெறவிருக்கும் பொலிஸ் தின விழாவில் பங்குபற்ற வடபிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு மகேந்திரன் யாழ் பொலிஸ் அதிபர் திரு வெல்லி விக்கிரமசூரியா ஆகியோர் சென்றுள்ளனர். [கோ]

தாதிகள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கின்றனர், இக்குறையை நிவர்த்திசெய்யும்படி சுகாதார அமைச்சர், யாழ் மாவட்ட அமைச்சர் எதிர்க்கட்சித் தலைவர், யாழ் எம்.பி. ஆகியோரை சபை கேட்டுக்கொள்கிறது.

திரு. ம. அலோசியஸின் கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேறியது. "எமது மாவட்ட உதைபந்தாட்ட, கரபந்தாட்ட வலைப்பந்தாட்ட போட்டிகளுக்கு பயிற்சியாளர்களுக்கு உள்ள ஒரேஒரு பொதுசன விளையாட்டரங்காக இருக்கும் இம் மைதானத்தில் அடிக்கடி ஹெலிகோப்டர் வந்து இறங்குவதாலும் அங்குள்ள சமாந்தரமணல் ஒருபக்கமாக ஒதுங்கி இம் மைதானத்தை பழுதாக்குவதால் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு. கோட்டைக்கு அல்லது அண்மையில் "அப்பலோ களியாட்டுவிழா நடைபெற்ற இடங்களை, இதற்கு முன்பாகவிருந்ததுபோல இத் தேவைக்குப் பாவிக்குமாறு இச்சபை கேட்டுக்கொள்கிறது"

அரசுக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வித்ததைத் தொடர்ந்து இதனை ஏற்றுக்கொண்ட பிரதமநீதவான் மேல்விசாரணை நவம்பர் மாதம் ஐந்தாம் திகதிக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் விசாரணை கொழும்பில் நடைபெறும் என்றும் தெரிவித்தார்.

இவ்வழக்கில் எட்டு இளைஞர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது நேற்று எவரும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. (ம)

காசி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனித்தனி வழக்குகள்

மேற்படி வழக்கு. நேற்று கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. வோல்டர் டி சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அரசுத் தரப்பு வழக்கறிஞர், மேற்படி விசாரணையை ஒத்திவைக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மாவட்ட நீதிபதி, அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் பன்னிரண்டாந் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுவதாகவும், அன்றைய தினம், முத்துக்குமாரு தாக்கல்செய்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படுமென்றும், மற்றையோரின் வழக்குச் சம்பந்தமான திகதிகளில் அன்றைய தினமே அறிவிக்கப்படுமென்றும் தெரிவித்தார். (ம)

பட்டப்பகலில் யாழ்நகரில் பெண்ணிடம் வழிப்பறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு சென்று திரும்புகையில், பட்டப்பகலில், யாழ் நகரில் ஒரு பெண் வழிப்பறி செய்யப்பட்ட சம்பவம் நடந்துள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிசார் கொழும்புத்துறை மணியம் தோட்டத்தைச் சேர்ந்த சந்தேகநபரான "ஹைபசிட்" மணியத்தை தேடிவருகின்றனர்.

ஆவரங்காலைச் சேர்ந்த சின்னத்தங்கம் என்ற பெண் ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பும்போது அவரிடமிருந்து சந்தேகநபரான மணியம், 50 ரூபாவை வழிப்பறிசெய்ததுடன் குடையையும் பறித்ததாக இச் சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

இதேசமயம், மற்றொரு நோயாளியிடம், சந்தேகநபர் அடித்து பணத்தை வழிப்பறி செய்ததாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபரான மணியத்தை பொலிசார் தேடிவருகின்றனர். இருவாரங்களுக்கு முன்னர் சில சம்பவங்கள் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டிருந்த மணியம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (கோ)

மரண அறிவித்தல்

முத்து வயிரவப்பிள்ளை

பளை, காங்கேசன்துறையைச் சேர்ந்தவரும் நீர்ப்பாசனத் திணைக்கள இளைப்பாறிய O A யும் ஆகிய முத்து வயிரவப்பிள்ளை காலமானார். அன்னார், மகேஸ்வரி அம்மாவின் அன்புக் கணவரும், பத்மராணி (UK) சண்முகராசா (கொழும்பு நீர்ப்பாசனப்பகுதி), சிவானந்தராசா, செல்வராணி (கொழும்புமருத்துவ பீடம்) ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற செல்லையா, இளைப்பாறிய மத்திய வங்கி சிறுப்பர் சின்னத்துரை, இளைப்பாறிய வருமானவரி மதிப்பீட்டாளர் முருகுப்பிள்ளை, திருமதி செல்லம்மா காசிவிசுவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் லண்டன் புகையிரதப்பகுதி பொறியியலாளர் இளங்கோவனின் மாமனுமாவார். இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் காங்கேசன்துறை மயானத்தில் நடைபெறும். 3735

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No: QD/8943/74 The Eelanadu P B No. 49; Telegram Eelanadu;
T Phone: 889